வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்: 3516 /ஆ4/ 2024நாள். 02.09.2025

பொருள் : பள்ளிக் கல்வி –2025–2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை 43ன் மானியக் கோரிக்கை அறிவிப்பு – பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறும் அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெறுதல்– சார்ந்த பள்ளிகளுக்கு – தெரிவித்தல்– தொடர்பாக .

பார்வை : 1) 2025–2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை எண் 43 மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண் 07.

2)தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,ந.க.எண்.0027/ஐ/இ1/2025 நாள் 02.05.2025 மற்றும் 20.05.2025 , 01.09.2025

3) இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 09.05.2025 மற்றும் 22.05.2025

=========

பார்வை 1–ல் காணும் அரசாணையின் படி 2025–26 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.7ல் வெளியிடப்பட்ட அறிவிப்பான 2024–25 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி வழங்கிய அரசு / அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மற்றும் தமிழ் பாடத்தில் 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் விழா எதிர்வரும் 07.09.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், Montfort School (CBSE), No.15, 12th Cross Road, Balaji Nagar, PappakurichiKattur 620019, பள்ளியில் காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது என பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

எனவே, வேலூர் மாவட்டத்தில் 2024–25 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி வழங்கிய இணைப்பில் உள்ள தலைமையாசிரியர்கள் 07.09.2025 அன்று காலை 7.00 மணியளவில் மேற்கண்ட பள்ளி வளாகத்திற்கு வருகை புரிந்து விவரங்களை பதிவு செய்து கொள்ளுமாறும், பாராட்டு விழாவில் தவறாமல் கலந்துக்கொள்ளும் பொருட்டு ஆளறி சான்றிதழினை இவ்வலுவலகத்தில் 04.09.2025 அன்று மாலை 5.30 மணியளவில் பெற்றுக்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : 100 விழுக்காடு தேர்ச்சி வழங்கிய தலைமை ஆசிரியர்கள் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
வேலூர்.

பெறுநர்
சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார் பள்ளிகள்) தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
3. அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.